**தென்னை பயிர்செய்கைச் சபை - 2014**

---

தென்னை பயிர்செய்கைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தென்னை பயிர்செய்கைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சொந்தமான நாற்றுமேடைகளில் எஞ்சியிருந்த ரூபா 123,683 தொகையான பசளை இருப்பு இறுதி இருப்பு கணப்பீட்டின் போது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் சபையின் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் நியாயப் பெறுமதியினை காட்டும் வகையில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 251,556 தொகையான கணக்காய்வுக் கட்டணம் உரிய ஒதுக்கீட்டிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக கணக்காய்வுக் கட்டணம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பேரேட்டில் பிரதி செய்யும் போது ஏற்பட்ட கணக்கீட்டு வழுவின் காரணமாக தொலைபேசி செலவினம் ரூபா 684,460 தொகை அதிகரித்தும் காகிதாதிகள் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 12 மாதிரி தென்னந் தோப்புக்களுக்காக பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்குகளை மாதாந்தம் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 05 தென்னந் தோப்புக்களில் 05 வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,261,799 ஆக இருந்ததுடன் 07 தென்னந் தோப்புக்களில் 07 செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,930,460 ஆக இருந்தது. மேலும் நாற்றுமேடைகளுக்காக பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் இணக்கஞ் செய்யப்படாத செலவு மீதி ரூபா 1,116,656 ஆக இருந்தது.

(ஊ) குருணாகல் பிரதேச அலுவலகத்தை நிர்மாணிப்பதற்குரிய நடைமுறை வேலைக் கணக்கு மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கு என்பன ரூபா 319,213 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) நாற்றுமேடைகளின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கீடுகள் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,000,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மாதிரித் தென்னந் தோப்புக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்வைக் கணப்பிடும் போது மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தவிர ஏனைய சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதிகள் கவனத்தில் கொள்ளப்படாமல் ஒவ்வொரு மாதிரித் தென்னந் தோப்புக்களுக்காகவும் முன்கொண்டுவரப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியான ரூபா 39,101,995 ஆரம்ப மீதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபையினால் உத்தியோகத்தர்களுக்கும் ஊயழியர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொலைபேசிப்பட்டியல்களைச் செலுத்துவதற்காக மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 454,725 தொகையொன்று பொறுப்பாகக் காண்பிப்பதற்குப் பதிலாக தொலைபேசி வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தென்னங் கன்றுகளின் பெறுமதி ரூபா 171,471,800 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 169,036,725 ஆனமையால் ரூபா 2,435,075 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக அம்பாறை கப்துறுபாய கட்டம் II மற்றும் திருகோணமலை உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணித்தலுக்காக செலுத்த வேண்டிய பணம் 2015 சனவரி மற்றும் பெப்ரவரியில் காணப்பட்ட நிலைமையில் கவனத்தில் கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.8.2 பந்திக்கு முரணாக சபையின் பிரதான அலுவலகத்தில் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்ட முகாமையாளர்களுக்காக இரண்டு தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்திற்குச் சமமான படியொன்றும், உதவி தோட்ட முகாமையாளரின் பிரதான அலுவலகத்தில் உதவிப் பொது முகாமையாளருக்கும் தோட்ட நிர்வாகச் சேவையின் கனிஷ்ட பதவிநிலை உத்தியோகத்தருக்காக தொழிலாளரொருவரின் மாதாந்த சம்பளத்திற்குச் சமமான படியொன்றுமாக 2011 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் ரூபா 16,710,389 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மாதிரித் தென்னந் தோப்புக்களில் தோட்ட முகாமையாளரும் உதவித் தோட்ட முகாமையாளரும் இந்த படிகளைப் பெற்றுக்கொள்வதுடன் அவர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் சேவைக்காக அந்த மாதிரி தென்னந் தோப்புக்களில் நாளாந்த தொழிலாளர்கள் இருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெலிகம தென்னை ஓலைகள் வெளிறல் மற்றும் அழுகுதல் நோய் ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெற்கு இலங்கை தெங்கு அபிவிருத்தி பயிற்சி

நிலையத்தின் அபிவிருத்திக்காக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் தொகையில் ரூபா 620,000 தொகை செலவில் உரிய நோக்கத்திற்கு முரணாக முத்திரை கொள்வனவு செய்யப்பட்டு வரிசை அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சபையின் நிதி விளைவுகள் ரூபா 34,890,412 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 71,772,762 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 36,882,350 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 82 மில்லியனால் அதிகரிப்பதை விட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செலவினம் ரூபா 118 மில்லியனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகினறன.

(அ) மீளாய்வாண்டில் மாதிரி தென்னந் தோப்புக்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 99,791,389 தேறிய இலாபமாக இருந்ததுடன் அதனுடன் ஒப்பீடு செய்த போது முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 71,337,032 ஆக இருந்தமையால் இலாபம் ரூபா 28,454,357 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நாற்றுமேடைப் பிரிவில் ரூபா 32,826,653 தேறிய இலாபம் பெறப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பெறப்பட்ட தேறிய இலாபம் ரூபா 91,244,893 ஆகும்.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

10 வெளிநபர்களினால் ரூபா 11,000,000 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி சபைக்கு எதிராக நீதிமன்றங்களில் 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் சபையினால் வெளி நிறுவனங்கள் மற்றும் 03 நபர்களுக்கு எதிராக ரூபா 2,174,915 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நீதிமன்றங்களில் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 மானியம் செலுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக சபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் திட்டமிடல் பிரிவினால் வழங்கப்பட்ட நிதித் தகவல்களுக்கிடையே இணக்கப்பாடு காணப்படாதிருந்ததுடன் அதன் வேறுபாடு ரூபா 4,274,348 ஆக இருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது சில மானிய நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது மானிய நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக இலக்கு மற்றும் செயல்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

(i) ‘‘கப்றுகை பறபுறய்’’ மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 160,000 தென்னங் கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட தென்னங் கன்றுகள் 119,717 ஆக இருந்தது. அதன்படி ஒட்டுமொத்த செயலாற்றல் 75 சதவீதமாக இருந்த போதிலும் பிரதேச அலுவலக மட்டத்தில் பரீட்சித்த போது 6 பிரதேச அலுவலகங்களின் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

(ii) ‘‘கப்றுக புறவற’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,802,610 தென்னங் கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட தென்னங் கன்றுகள் 1,785,356 மாத்திரம் ஆகும். அதன்படி செயலாற்றல் 99 சதவீதமாகும். எவ்வாறாயினும் பிரதேச அலுவலக மட்டத்தில் பரீட்சித்த போது திருகோணமலை பிரதேச அலுவலகத்தின் செயலாற்றல் 23 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iii) தென்னங் காணிகளை புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 350,010 தென்னங் கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 392,156 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன்படி செயலாற்றல் 112 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், பிரதேச அலுவலக மட்டத்தில் பரீட்சித்த போது பொலன்னறுவை மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகங்களில் செயலாற்றல் முறையே 35 சதவீதம் மற்றும் 49 சதவீதம் என்ற ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

மீளாய்வாண்டின் போது தென்னங் காணி புனரமைப்பு மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்நிரப்பு நடுகைக்காக தென்னங் கன்றுகளை பகிர்ந்தளித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பங்கசுத் தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் ஈரலிப்பைப் பாதுகாப்பதற்காக மானியம் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) புனித பூமியில் தெங்குப் பயிர்ச்செய்கை மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2,500 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 8,755 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிந்தன. அதன்படி செயலாற்றல் 350 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், பிரதேச அலுவலக மட்டத்தில் பரீட்சித்த போது குளியாப்பிட்டி பிரதேச அலுவலகத்தின் செயலாற்றல் 40 சதவீதம் என்ற ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.1.2 மாதிரித் தென்னந் தோப்பு

மீளாய்வாண்டின் போது மாதிரி தென்னந் தோப்பாக 12 தோட்டங்கள் சபையினால் முகாமை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சராசரி நிலைமையின் கீழ் தென்னைப் பயிர்ச்செய்கை நிலத்தில் ஒரு ஏக்கரில் வருடாந்தம் ஆகக் குறைந்தது 4,500 – 5,000 தேங்காய்களுக்கிடையிலான அளவில் தேங்காய் விளைச்சல் பெறக்கூடியதாக இருந்த போதிலும் ஒட்டு மொத்தமாக சபைக்குரிய மாதிரி தென்னந் தோப்புகளிலிருந்து மஹயாய, பாசிக்குடா மற்றும் முந்தலம தென்னந் தோப்பு தவிர ஏனைய சகல மாதிரி தோட்டங்களிலும் விளைச்சல் அந்த சராசரி மட்டத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 05 மாதிரி தென்னந் தோப்புக்களில் விழுகின்ற தேங்காய்களின் சதவீதம் 30 தொடக்கம் 56 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.1.3 தோட்ட முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோட்டங்களின் செயல்முன்னேற்றத்தை புலனாய்வு செய்வதற்காக இணையத்தள தகவல் முறைமையில் தரவுகளை உள்ளீடு செய்தல், தோட்ட முகாமையாளரின் இரகசிய குறியீட்டினை பயன்படுத்தி தோட்ட முகாமையாளர் அல்லது அவர்களின் கீழுள்ள உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இணையதளத்திற்கு உட்பிரவேசிக்கும் குறிப்பைக் காட்டுகின்ற பதிவேடு பேணப்படாமையினாலும் இந்த தரவுகளை யார் உட்புகுத்துகின்றார்கள் என்பதைக் கண்டறியும் தகவல்கள் காணப்படாமையின் காரணமாகவும் அந்தத் தரவுகளின் நம்பிக்கைத் தன்மை மற்றும் அதன் பொறுப்புக்கள் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தேங்காய் விளைச்சல் மற்றும் விளைச்சல் தருகின்ற தென்னை மரங்கள் தொடர்பாக தோட்டங்களின் செயல்முன்னேற்றத்தை புலனாய்வு செய்வதற்காக இணையதள தகவல் முறைமையின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்கள் மற்றும் அது தொடர்பாக நேரடியாக (மனுவல்) முறைமையின் மூலம் வழங்கப்படுகின்ற தகவல்களுக்கிடையே இணக்கப்பாடு காணப்படவில்லை. இவ்வாறு இணக்கப்பாடு காணப்படாமையினால் தென்னந் தோப்புக்களின் நாளாந்த, வாராந்த, மாதாந்த மற்றும் வருடாந்த செயல்முன்னேற்றம் தகவல் முறைமையின் மூலம் மீளாய்வு செய்யும் நோக்கத்தை அடைந்து கொள்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 12 மாதிரித் தென்னந் தோப்புக்களுக்குரிய தென்னைப் பயிர்ச்செய்கைக்கான காணி பொருத்தமானதாக வகைப்படுத்தப்படாதிருந்ததுடன் அதனால் ஆகக் கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய உபாயங்களை சரியாக இனங்காணுவதிலுள்ள சிக்கல்களும், தேங்காய் விளைச்சலை சரியாக மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்கும் முடியாதிருந்தது.

(ஈ) தென்னை மயிட்டாவைக் கட்டுப்படுத்தும் உள்ளக சிபார்சுகளை தவிர்க்கும் போது நிரந்தர உயிரியல் விஞ்ஞான முறையாக எதிர்ப்பு மயிட்டா தென்னை ஆராய்ச்சி சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது தெங்கு பயிர்ச்செய்கைச் சபை 07 எதிர்ப்பு மயிட்டா ஆய்வுகூடங்களைப் பேணியிருந்தது. எவ்வாறாயினும் சபை பேணுகின்ற 12 மாதிரி தென்னந் தோப்புக்களில் கலட்டி/குறுவல்/சிறிய காய் அளவில் உயர்வடைவதற்கு மயிட்டா இழப்பு தவிர்க்க முடியாத காரணமாக இருந்தது.

**4.1.4 எதிர்ப்பு மயிட்டா உற்பத்தியும் பகிர்ந்தளித்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த 6 மயிட்டா ஆய்வுகூடங்களுக்குரிய எதிர்ப்பு மயிட்டா பக்கற்று உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான இலக்குகள் எதுவும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது முல்லைத்தீவு மற்றும் வாரியபொல போன்ற எதிர்ப்பு மயிட்டா ஆய்வுகூடங்கள் இரண்டில் எதிர்ப்பு மயிட்டா பக்கற்று பகிர்ந்தளிக்கும் செயலாற்றலை அதன் உற்பத்தியுடன் ஒப்பீடு செய்த போது முறையே 43 சதவீதம் மற்றும் 52 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட 7 எதிர்ப்பு மயிட்டா ஆய்வுகூடங்களில் 5 ஆய்வுகூடங்களின் உள்ளபடியான உற்பத்தி இயலளவு மட்டத்தில் ஒரு பகுதியையாவது அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடைக் கணிப்பீட்டிற்காக மனித வள முகாமைத்துவப் பிரிவு வழங்கிய நியமனத் திகதி மற்றும் கணக்குப் பிரிவினால் கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட நியமனத் திகதி என்பவற்றிற்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் பிரதான அலுவலகத்திற்காக பணிக்கொடை ஒதுக்கீடாக காண்பிக்கப்படுகின்ற ரூபா 156,617,588 இன் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டின் போது ஜீப் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாக ரூபா 149,640 தொகை வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையில் ரூபா 89,550 இற்கு பழுதுபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய பணமான ரூபா 60,090 மீள அறவிடப்படாமல் முற்பணக் கணக்கில் தொடர்ந்தும் பேணப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை மயுரபுற நாற்றுமேடையைப் பராமரிப்பதற்காக சபை ரூபா 3,937,932 செலவினமொன்றைச் செய்திருந்தது. இருந்த போதிலும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமையினால் மேற்கூறப்பட்ட செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 564,305 செலவில் நாற்றுத் தேங்காய் இடப்பட்டிருந்த போதிலும் அது தோல்வியடைந்திருந்தது. இந்த நாற்றுமேடைக்கு இரண்டு பாதுகாவலர்களுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2015 செப்தெம்பர் 30 வரை ரூபா 34,000 இற்கு அண்ணளவான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மொனறாகலை மாவட்டத்திலும் வெலிகமயிலும் தென்னை ஓலை வெளிறல் மற்றும் அழுகுதல் நோய் ஆபத்தை அவதானித்தலை தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் சபையினால் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவருக்கு 2013 நவம்பர் 11 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை சாரதியுடன் வாகனமொன்று மொனறாகலை பிரதேச அலுவலகத்திற்கு வழங்கப்பட்டு ரூபா 810,828 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவர்களினால் இது தொடர்பாக சமர்ப்பித்திருந்த அவதானிப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை வெலிகம நோய் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாதிருந்ததுடன் அந்த அறிக்கையில் நோயைத் தடுத்தல் தொடர்பாக எவ்வாறு ஈடுபடுதல் வேண்டும் என்பது பிரச்சினையாக இருந்தது.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 925 ஆக இருந்ததுடன் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 687 ஆகும். செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக உரியவாறு அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலையிலுள்ள பதவிகள் முறையே 3 மற்றும் 208 உம், ஆரம்ப நிலையில் 27 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மனிதவள முகாமைத்துவம்
(ஆ) நாற்றுமேடை முகாமைத்துவம்
(இ) தோட்ட முகாமைத்துவம்
(ஈ) மானியக் கொடுப்பனவு